[2008 ஏப்ரல் 16

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டபடி, மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக இருப்பவர்களுக்கு, முறையாக அவர்களுடைய பெயரில் 3 சென்ட் பட்டா நிலம் இருக்குமேயானால், நிச்சயமாக மீனவர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டித் தரப்படும் என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 110, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. கண்ணன், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள்.

110—

தொழிற்பேட்டை

***27813-திரு. பெ. கண்ணன்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதியில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்மூலம் புதிய தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதியில் கதர் கிராமத் தொழில் வாரியத்தின்மூலம் தொழிற்பேட்டை அமைக்கும் உத்தேசம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. கண்ணன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2008 ஏப்ரல் 16]

திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாரமங்கலம் தொகுதியில், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்மூலம் புதிய தொழிற்பேட்டையை அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாரமங்கலம் பகுதியில், தாரமங்கலத்தில் பட்டு உற்பத்தி அலகு ஒன்று உள்ளது. அதில் மாதந்தோறும் சுமார் 200 பட்டுப் புடவைகள் உற்பத்தி ஆகின்றன. தற்போது 40 தறிக்காரர்கள் உள்ளனர். மேலும் 40 தறிக்காரர்களைத் தற்போது சேர்க்க உள்ளார்கள். மேச்சேரி பகுதியில், விருத்தாசலம்பட்டியில் 2 கதர் நூற்பு நிலையங்கள் நடைபெற்று வருகின்றன. அதேபோல, மேச்சேரியிலும் ஒரு நூற்பு நிலையம் உள்ளது. அதனால், மேலும் அந்த இடத்தில் வேறு தொழில் தொடங்கும் உத்தேசம் அரசிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. கண்ணன்.

திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாரமங்கலம், மேச்சேரி, முத்துநாயக்கன்பட்டி போன்ற பகுதிகளில், இந்தத் தொழில், மகாத்மா காந்தியினுடைய கனவு நனவாகும் வகையில், சோப்பு, குங்குமம், கற்பூரம், பொம்மை, துணி, தோல் பொருள்கள் அனைத்தும் செய்து கொடுக்க இந்த ஏழையெளிய மக்களுக்குத் தொழிலும், முழுநேரத் தொழிலாக அமைவதற்கு இந்த அரசு அந்தத் தொழிற்பேட்டையை அமைத்துக் கொடுக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அதற்கும் மேலாக, தாரமங்கலத்தில் சோப்பு கம்பெனி ஒன்று அரசின்மூலம் கோபுரம் சோப்பு என்று செய்துகொண்டிருந்தார்கள். அதை மூடிவிட்டார்கள். அந்தத் தொழிற்பேட்டையின்மூலம் அதையும் திறந்து, அந்த மக்களுக்கு, உரிய வேலைவாய்ப்புகள் கிடைக்க அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள்.

[2008 ஏப்ரல் 16

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாரமங்கலம் தொகுதியில், புதியதாகத் தொழில் ஆரம்பிப்பதற்கான சாத்தியக் கூறுகள் ஏதுமில்லை என்றாலும், மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும்பொருட்டு, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் தற்போது மும்பை கதர் கிராம ஆணைக் குழுமூலம், கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், விளிம்புத் தொகை மானியம் வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்மூலம் 25 முதல் 30 விழுக்காடு வரை மானியம் பெற்று, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்மூலம் 116 குடிசைத் தொழில்களுக்கு இந்தத் துறையில் அறிவிக்கப்பட்டுள்ள குடிசைத் தொழில்கள், அதற்காகக் கடனுதவி வழங்கப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்தத் திட்டத்தின்மூலம், தனி நபரோ அல்லது குழுக்களாகவோ சேர்ந்து, தொழில் தொடங்கினால் அதற்கு அந்தத் துறையின் உதவி இயக்குநர் அவர்களை அணுகினால், தகுந்த ஆலோசனை தருவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர்த் துறையின் சார்பாக, தமிழகத்திலே இருக்கின்ற கதர்க் கடைகளுக்கு, கதர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடந்த 6 ஆண்டு காலமாகத் தமிழக அரசால் மானியம் வழங்கப்படவில்லை. அதனால், அந்தக் கூட்டுறவுச் சங்கங்களெல்லாம் மிகவும் நலிவடைகின்ற நிலையில் இருக்கின்றன. மத்திய அரசு கொடுக்கவேண்டிய மானியத்தைக் கொடுத்துவிட்டது. ஆடிட் செய்ய வேண்டுமென்று அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசு ஏற்கெனவே ஆடிட் செய்து, அவர்கள் கொடுக்க வேண்டிய நிதியைக் கொடுத்துவிட்டார்கள். தமிழக அரசு உடனடியாக ஆடிட் செய்தோ அல்லது அவர்களுக்கு அவசர கால நிதியாகவோ—30 கோடி ரூபாய் பாக்கி வைத்திருக்கிறார்கள்—அதை உடனடியாகக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்திலிருந்து இந்தத் தொகைகளை பாக்கி வைத்திருந்தனர். இந்த அரசு வந்த பின்னர் எடுத்த நடவடிக்கையின்

காரணமாக, முதல் தவணையாக 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் தற்போது கொடுக்கப்பட்டுள்ளது. அதில், இப்போது தணிக்கை அறிக்கை கிடைக்காமல் அந்தப் பணத்தினைப் பட்டுவாடா செய்யக்கூடாது என்று நிதித் துறையின்மூலமாக நமக்கு ஒரு கட்டுப்பாடு உள்ளதால், அந்தத் தணிக்கை அறிக்கை பெறுவதற்காக நாங்கள் முயற்சி செய்து வருகிறோம். அதை இந்த ஆண்டு இறுதிக்குள் எவ்வளவு தொகை முடிந்த அளவிற்கு அந்தத் தணிக்கை அறிக்கையைப் பெற்றுக் கொடுக்க முடியுமோ, கொடுத்துவிடுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

முற்பகல் 10-25

2. தகவல் கோரல்

(அ) தமிழ்நாட்டில் சில அரசியல் கட்சித் தலைவர்கள் உள்ளிட்ட சில உயர் அதிகாரிகளின் தொலைபேசிகளைத் தமிழ்நாடு காவல் துறை புலனாய்வுப் பிரிவு ஒட்டுக்கேட்பதாக வந்துள்ள பத்திரிகைச் செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், சொல்லுங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, 56-வது விதியின்கீழ் நேற்றையதினம் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானமும், இன்றையதினம் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானமும் நாங்கள் கொடுத்திருக்கிறோம். தமிழக புலனாய்வுத் துறை ஒட்டுக் கேட்கிறது, அரசியல் கட்சித் தலைவர்களின். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் Subject-க்குள் போக வேண்டாம். ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறீர்கள். நேற்று அது சம்பந்தமாக முதலமைச்சர் அவர்கள் பதில் கொடுத்து விட்டார்கள். விசாரணை ஆணையமும் அமைக்கப்பட்டிருக்கிறது. உங்களிடம் ஏதாவது evidence இருந்தால் அங்கே போய் produce பண்ணுங்கள்.